189

# நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர் :

ரா. கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்
செங்கல்பட்டு மண்டலம்,
124, ஜி.எஸ்.டி.ரோடு,
நகராட்சி வணிக வளாகம், செங்கல்பட்டு – 1.
Email : ddcglregion@gmail.com

பெறுநர் :

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
மாம்பாக்கம் ஊராட்சி,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண். 14674/2018 செம3 நாள் : 23.11.2018

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள். 301/3A பகுதி, 3B பகுதி, 5 பகுதி, 303/1B1A பகுதி, 1B1B பகுதி, 1B1C மற்றும் 303/3 பகுதி-ல் பரப்பு ஏக்கர் 3.00 செண்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் சாலை ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோருதல் – தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு. R. ராஜ்குமார் (ம) ஒருவர் அவர்கள் கடிதம் நாள் : 06.08.2018
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 24232/2005/எல்ஏ2 நாள் : 04.05.06
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7978/2012/எல்ஏ2, நாள் : 19.04.12

---

பார்வை(1)ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு (Road Pattern) வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ள சாலைகள் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 விதி 3(5)-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப சரளை கற்களை (Metaling) கொண்டு தார்சாலை அமைத்து தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) நிர்ணயிக்கும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்படல் வேண்டும். அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) கருத்திற்கேற்ப மனுதாரரால் அமைத்து தரப்படல் வேண்டும்.

For NDVN ... PVT LTD.
Director

பார்வை(2)ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள், மற்றும் மூலை முடக்கு பகுதி, ஆகியவற்றிற்கான நிலங்களை உள்ளாட்சிக்கு தானமாக வழங்கும்போது தானப்பத்திரத்தில் ஒவ்வொரு சாலைக்கும் எண்ணிட்டு சாலையின் நீளம் மற்றும் அகலம் அளவுகள் மற்றும் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்படல் வேண்டும். வரைபடத்தில் எண்ணிட்டும், தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) கையொப்பமிட்ட வரைபடத்தின் நகலையும் பத்திரப்பதிவு அலுவலகத்தில் சேர்த்து பதிவு செய்தல் வேண்டும்.

பார்வை(3)ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் அனைத்தும் தார் சாலைகளாக அமைத்து அதன் நிழற்படம் (photo) எடுத்து இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் எல்லை வரை (upto the end of boundary) தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதற்கு உறுதிமொழியினை மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொண்டு அதனை உறுதி செய்து ஊராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான எண்ணுடன் தானப்பத்திரத்தில் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) கையொப்பமிட்டு பத்திரம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு சாலைக்கான தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்து அத்தாட்சியிட்ட தானப்பத்திர நகல், மன்றத் தீர்மானம், வில்லங்க சான்று மற்றும் (Photo) நிழற்படம் ஆகியவற்றினை தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்.

23/11/18
23.11.18

இணைப்பு : சாலை அமைப்பு வரைபடம் - 1

நகல் : Thiru. G. Ramakrishnan,
Thiru. N. Subash Chandrabose,
No.10, 11th Avenue,
Ashok Nagar,
Chennai - 600 083.

For NDVN PROPERTIES PVT LTD.

Director

**தனி அலுவலர், மாம்பாக்கம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.**

ந.க.எண்.2764/2019/ஆ1.

நாள்.16.09.2019

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - மாம்பாக்க ஊராட்சி மற்றும் கிராமம் Mr.G.Ramakrishnan & Mr.N.Subas Chandrabose என்பவரின் சர்வே எண்கள். 301/3A part, 3B part, part, 303/1B1A part, 1B1B part, 1B1C & 303/3 part-ல் ஏக்க 3.00 செண்ட் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற் தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் சார்ந்து.

பார்வை - 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட் மண்டலம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.14674/2018/செம- நாள்.23.11.2018.
2.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கை நாள். . .2019.
2.தானபத்திரம் எண்.6468/2019. நாள்.22.05.2019.
3.ஊராட்சி மன்றத் தீர்மான எண். 33 நாள்.03.06.2019, 7 நாள்.03.09.2019.
4.இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்.04.09.2019.
5.மாம்பாக்கம் பலவகை வரவு ரசீது எண்கள்.144 நாள்.16.09.2019.

*********

**உத்திரவு**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் மாம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் Mr.G.Ramakrishnan & Mr.N.Subash Chandrabose என்பவரின் சர்வே எண்கள். 301/3A part, 3B part, 5 part, 303/1B1A part, 1B1B part, 1B1C & 303/3 part-ல் ஏக்கர் 3.00 செண்ட் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு அவர்களின் ஒப்புதல் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கையின்படி, பார்வை 3-ல் காணும் தானபத்திரத்தின்படி, ஊராட்சிக்கு 36313சதுரடி(சாலை மற்றும் மூலைமுடுக்கு) ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.3,80,468/- (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து நானூற்று அறுபத்தெட்டு மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்கள்.1441 நாள்.16.09.2019 மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம்

N PROPERTIES PVT LTD.
Director

மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளான 19 (இ) மற்றும் 19(உ) குறித்து ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

7) இம்மனைப்பிரிவு தொடர்பாக பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். நிபந்தனைகள் மீறும் வகையில் இம்மனைப்பிரிவு நிலஉரிமை குறித்து ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

8) இம்மனைப்பிரிவிற்கு மனுதாரரிடமிருந்து கூராய்வு கட்டணம் மட்டும் பெறப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வதூலிக்கப்படும்.

தனி அலுவலர், மாம்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

Mr.G.Ramakrishnan
& Mr.N.Subash Chandrabose
No.10, 11th Avenue,
Ashok Nagar, Chennai - 600083.

நகல் - ஊராட்சி செயலர், மாம்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

For NDVN PROPERTIES PVT LTD.

Director